THE HINDU
17 MAY 2024

# Nearly 67% turnout in first four phases: EC

Press Trust of India
NEW DELHI

The cumulative turnout in the first four phases of the Lok Sabha election has been recorded at 66.95%, the Election Commission said on Thursday, adding that 45.1 crore of the nearly 97 crore electors have exercised their franchise.

In a statement, it urged voters to come out and vote in large numbers in the coming phases.

According to the poll authority, the updated voter turnout in the fourth phase of polling held on May 13 was 69.16%, 3.65 percentage points higher than that of the corresponding phase in the 2019 polls.

The updated voter turnout figures for the third phase of polling in the Lok Sabha election stood at 65.68%. In the third phase of the 2019 election, the turnout was 68.4%.

In the second and first phases, the turnout was 66.71% and 66.14% respectively. It was 69.64% and 69.43% in 2019.

THE HINDU

17 MAY 2024


# 'Giving citizenship is violation of poll code'

## Indian Union Muslim League to approach SC and EC against the move; 300 people were granted citizenship certificates in Delhi on Wednesday

**The Hindu Bureau**
KOZHIKODE

The Indian Union Muslim League (IUML) is planning to approach the Supreme Court and the Election Commission against the Centre's distribution of citizenship certificates under the Citizenship (Amendment) Act (CAA).

At least 14 people were given their certificates by Union Home Secretary Ajay Kumar Bhalla at an event in the national capital on Wednesday. They all came from Pakistan. A total of 300 people were granted citizenship certificates on the day.


P.K. Kunhalikutty

"It is being done with the objective of influencing the ongoing Lok Sabha election. Therefore, it is a violation of the election code of conduct. The Election Commission should act on it," said IUML general secretary P.K. Kunhalikutty.

"The BJP thinks it can win the election by influencing the voters with such ploys. That party is daydreaming," said Mr. Kunhalikutty.

IUML leaders said the Union government had earlier told the top court that it was not in a hurry to implement the CAA. That was in response to the petitions filed in the court by the IUML and a host of organisations and individuals seeking a stay upon the implementation of the law.

The IUML said the Centre had misled the top court. The distribution of the citizenship certificates was an election gimmick. The party would seek the opinion of legal experts against this, it said.

THE HINDU

17 MAY 2024

# Retain 25 companies of CAPF post counting in A.P.: EC to MHA

**Press Trust of India**

NEW DELHI

The Election Commission (EC) on Thursday directed the Ministry of Home Affairs (MHA) to retain 25 companies of the Central Armed Police Forces (CAPF) in Andhra Pradesh even after the counting of votes on June 4, in view of the post-poll violence.

It conveyed its displeasure to Chief Secretary K.S. Jawahar Reddy and DGP Harish Gupta over the incidents.

In a statement, the EC directed the Chief Secretary and the DGP to ensure that such violence is not repeated and all SPs to be tasked with preemptive measures to avoid such a situation in future.

The poll authority had summoned Chief Secretary and DGP to Nirvanchan Sadan here to seek "personal explanation" over the violence reported on Monday and Tuesday.

"The Commission decided to direct the MHA to retain the 25 CAPF companies in Andhra Pradesh for 15 days after counting, to control any violence after declaration of results," the poll panel said. It said the State had requested that the CAPF be retained for 15 days post counting.

Several incidents of violence were reported in Ananthapuramu, Palnadu and Tirupati districts.

DECCAN CHRONICLE
17 MAY 2024

# 66.95% polling in first 4 phases: EC

**New Delhi, May 16:** The cumulative turnout in the first four phases of the Lok Sabha elections has been recorded at 66.95 per cent, the Election Commission said on Thursday, adding 45.10 crore of the nearly 97 crore electors have voted so far in the ongoing electoral exercise.

In a statement, the poll panel urged electorate to come out and vote in large numbers in the coming phases.

According to the poll authority, the updated voter turnout in the fourth phase of polling held on May 13 was 69.16 per cent, 3.65 percentage points higher than the corresponding phase in the 2019 parliamentary polls.

The updated voter turnout figures for the third phase of polling in the Lok Sabha election stood at 65.68 per cent. In the third phase of the 2019 general election, the turnout was 68.4 per cent.

In the second phase of the election held on April 26, the turnout was recorded at 66.71 per cent as against the 69.64 per cent in the second phase of the 2019 polls.

In the first phase of the ongoing general elections, a 66.14-per cent turnout was recorded. In the 2019 polls, the turnout in the first phase was 69.43 per cent.

**POLLING SO FAR**
(2019 figures in bracket)

First phase: 66.14% (69.43%)

Second phase: 66.71% (69.64%)

Third phase: 65.68% (68.4%)

Fourth phase: 69.16% (65.51)

The EC said there is enhanced focus on to inform, motivate and facilitate voters in the remaining three phases of the parliamentary polls and state chief electoral officers have been asked to step up measures.


"The Commission strongly believes that partnership and collaboration are essential pillars of voter awareness programme. It's really heartening to see that on Commission's request, different institutions, influencers and celebrities having significant reach are working enthusiastically on pro-bono basis," Chief Election Commissioner Rajiv Kumar said.

THE TIMES OF INDIA

17 MAY 2024

# Voter turnout in 1st 4 phases of LS polls at 67%, says EC

Times News Network



**Polling data available till now indicate that the turnout in the first three phases saw a dip compared to 2019, but the gap narrowed in the fourth phase, coming down to around 0.4 percentage points**

**New Delhi:** Voter turnout in the first four phases of the ongoing Lok Sabha polls stands at 67%, Election Commission said on Thursday. Around 45.1 crore voters of 97 crore electors have voted so far, it said.

Polling data available till now indicate that the turnout in the first three phases saw a dip compared to 2019, but the gap narrowed in the fourth phase — coming down to around 0.4 percentage points.



The poll body is expected to release the final voting percentages for the fourth phase on Friday. EC's voter turnout app put it at 69.2%; the turnout in these seats (minus Srinagar) in 2019 was 69.6%. "High voter turnout is a message from Indian voters to the world at large," EC said in a statement. It added that as part of its outreach to enhance voter turnout, the poll body has introduced various interventions to appeal to and motivate voters to cast their vote.

Chief elction commissioner **Rajiv Kumar** and elections commissioners Gyanesh Kumar and Sukhbir Singh Sandhu have directed the state chief election officers where polls will be held in fifth, sixth and seventh phase to distribute voter information slips well in time to all electors and enhance outreach activities.

"Commission strongly believes that partnership and collaboration are essential pillars of voter awareness programme. It's really heartening to see that on Commission's request, different institutions, influencers and celebrities having significant reach are working enthusiastically on pro bono basis," the CEC said.

THE NEW INDIAN EXPRESS

17 MAY 2024

HEARING TODAY

# Total turnout 66.95% so far, says poll panel

MUKESH RANJAN @ New Delhi

THE Election Commission of India on Thursday put the cumulative turnout in the four phases of Lok Sabha elections at 66.95%. The poll panel in a statement said that the updated voter turnout in the fourth phase on May 13 was 69.16%, which was 3.65% higher than the corresponding phase in the 2019 general elections. This is the only phase where the turnout graph went up.

In the third phase, the updated turnout was 65.68%, about 3% lower than 2019's data of 68.40%. Likewise, the second phase recorded 66.71% polling as against 69.64% in the 2019 polls, down by about 3%. And the first phase turnout was 66.14% as against 69.43% in 2019, a drop of 3.3%.

As many as 45.10 crore voters out of the total 97 crore on the poll rolls in 379 seats across 23 states and Union Territories have voted in the first four phases of elections. Three more phases are due with the last day of polling on June 1.

The Supreme Court will on Friday hear a plea of the Association for Democratic Reforms, an NGO, seeking a direction to the Election Commission to upload polling station-wise voter turnout data on its website within 48 hours of conclusion of polling for each phase of the Lok Sabha elections.

இந்து தமிழ் திசை

17 MAY 2024

# வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு அடுத்த வாரம் பயிற்சி

## தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தகவல்

சென்னை

மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கு அடுத்த வாரம் பயிற்சி தொடங்கும் என தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்தார்.

தமிழகத்தில் கடந்த ஏப்.19-ம் தேதி மக்களவை தேர்தல் வாக்குப் பதிவு முடிந்து, வாக்கு எண்ணிக்கை மையங்களில் மின்னணு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.



### பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆய்வு

இந்நிலையில், வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள், வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகள் குறித்து, தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு கடந்த சில தினங்களாக திருவள்ளூர், ராமநாதபுரம், தூத்துக்குடி தொகுதிகளில் ஆய்வு செய்தார்.

இந்நிலையில், ஆய்வு மற்றும் ஏற்பாடுகள் குறித்து அவர் நேற்று கூறியதாவது:

வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்படி, ஸ்டிராங் அறை முன்பு கூடுதல் கேமரா பொருத்தப்பட்டு, மின்சாரம் தடைபட்டாலும் அந்த கேமரா இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி அடுத்த வாரம் தொடங்கும். அனைத்து மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாக இல்லாமல், மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பயிற்சிக்கான தேதியை முடிவு செய்வார்கள்.

### பறக்கும் படையினர்

தற்போது அண்டை மாநிலங்களில் வாக்குப் பதிவு முடிந்துள்ளதால், எல்லையோர மாவட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ள பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுக்கள் திரும்ப பெறப்படுவர். எனினும், எல்லைப் பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் வழக்கமான சோதனை தொடர்ந்து நடைபெறும்.

இந்த சோதனைச் சாவடிகளில் வெளிமாநிலங்களில் இருந்து வரும் வாகனங்களில் பிடிபடும் ரொக்கம் உள்ளிட்டவற்றின் மதிப்பு, அந்தந்த அண்டை மாநிலங்களுக்கும் தெரிவிக்கப்படும். அதேபோல், அவர்களும் பிடிபடும் ரொக்கம், பொருட்களின் விவரங்களை தெரிவிப்பார்கள். இதர மத்திய அரசு துறைகளால் பிடிக்கப்படும் தொகை குறித்த விவரங்கள் நேரடியாக தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிக்கப்படும்.

வாக்கு எண்ணிக்கையின் போது, ஒவ்வொரு மேஜைக்கும் ஒரு நுண் பார்வையாளர் நியமிக்கப்படுவார். தேர்தலின்போது பணியாற்றிய மத்திய பார்வையாளர்கள், வாக்கு எண்ணிக்கையின் போதும், கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். மக்களவை தொகுதிக்குட்பட்ட சட்டப்பேரவை தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கையை கவனிக்க தேவைப்படும் இடங்களில், ஐஏஎஸ் அல்லது மாநில அதிகாரிகளை தேர்தல் ஆணையம் கூடுதல் பார்வையாளர்களாக நியமிக்கும்.

இவ்வாறு சத்யபிரத சாஹு தெரிவித்தார்.

CEO, TN informs that Training class for counting persons will be conduct next week

தினத்தந்தி

17 MAY 2024

**66.95 சதவீத வாக்குப்பதிவு**

# நாடாளுமன்ற தேர்தலில் இதுவரை 45 கோடி பேர் வாக்களிப்பு

## தேர்தல் கமிஷன் பெருமிதம்

புதுடெல்லி, மே.17-

நாடாளுமன்றதேர்தலில் இதுவரை 45 கோடி பேர் வாக்களித்துள்ளனர் என்றும், 4 கட்ட தேர்தல்களில் 66.95 சதவீத வாக்குகள் பதிவானதாகவும் தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

### நாடாளுமன்ற தேர்தல்

நாடாளுமன்றத்துக்கு 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது. அதன்படி முதல் கட்ட தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் 19-ந்தேதி நடைபெற்றது. இதில் அதிகபட்சமாக 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. அதில் தமிழ்நாடு, புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகள் அடங்கும்.

அதைத்தொடர்ந்து ஏப்ரல் 26-ந்தேதி 2-ம் கட்டமாக 88 தொகுதிகளுக்கும், 3-ம் கட்ட தேர்தல் 93 தொகுதிகளுக்கு கடந்த 7-ந்தேதியும், 4-ம் கட்டமாக 96 தொகுதிகளுக்கு கடந்த 13-ந்தேதியும் தேர்தல் நடைபெற்றது.

### 379 தொகுதிகள்

அதன்படி இதுவரை மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் 23 மாநிலங்களை உள்ளடக்கிய 379 தொகுதிகளில் வாக்குப்பதிவு முடிவடைந்து விட்டது. சூரத் தொகுதியில் பா.ஜனதா வேட்பாளர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எஞ்சியுள்ள 3 கட்டங்களுக்கான வாக்குப்பதிவுகள் முறையே வருகிற 20, 25 மற்றும் ஜூன் 1-ந்தேதிகளில் நடைபெறுகிறது.

### 45 கோடிபேர் வாக்களிப்பு

இந்தியாவில் 97 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இது உலக அளவில் வாக்காளர்கள் எண்ணிக்கையில் அதிகபட்சமாகும். அந்த 97 கோடி வாக்காளர்களில், இதுவரை 45.10 கோடி பேர் வாக்களித்துள்ளனர். இது சில நாடுகளின் மக்கள் தொகையை விட, இந்தியாவில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்

இந்த 4 கட்டங்களிலும் மொத்தமாக 66.95 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

முதல் கட்ட தேர்தலில் 66.14 சதவீதமும், 2-ம் கட்ட தேர்தலில் 66.71 சதவீதமும், 3-ம் கட்ட தேர்தலில் 65.68 சதவீதமும் வாக்குகள் பதிவாகி இருந்தது. 4-ம் கட்ட தேர்தலில் அதிகபட்சமாக 69.16 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மீதமுள்ள 3 கட்ட தேர்தலிலும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, வாக்கு பதிவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் கமிஷனின் வேண்டுகோளின் பேரில், பல்வேறு நிறுவனங்கள், பிரபலங்கள் ஆகியோர் வாக்களிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆர்வமாக பங்கேற்றது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்று தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.

மேலும் வாக்களிக்கும் நாள் விடுமுறை அல்ல, ஜனநாயகத் திருவிழாவில் பங்கேற்பதற்குப் பெருமை சேர்க்கும் நாள் என்பதை உணர்ந்து வாக்காளர்கள் அதிக அளவில் வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 4 கட்ட வாக்கு சதவீத விவரம்

இதுவரை நடைபெற்ற 4 கட்ட தேர்தலில் பதிவான வாக்கு சதவீதமும், கடந்த 2019-ம் ஆண்டு தேர்தலில் 4 கட்டங்களில் பதிவான வாக்கு சதவீதமும் வருமாறு:-

| | 2019 | 2024 |
|---|---|---|
| முதல் கட்ட வாக்கு சதவீதம் | 69.43 | 66.14 |
| 2-ம் கட்ட வாக்கு சதவீதம் | 69.64 | 66.71 |
| 3-ம் கட்ட வாக்கு சதவீதம் | 68.04 | 65.68 |
| 4-ம் கட்ட வாக்கு சதவீதம் | 65.51 | 69.16 |

ECI proud that 45 crore people were registered their vote. & 66.95% vote were registered in overall india.

தினத்தந்தி
17 MAY 2024

### தேர்தலுக்குப் பிறகும் நீடிக்கும் வன்முறை:

# ஆந்திராவில் 2 போலீஸ் சூப்பிரண்டுகள் பணியிடை நீக்கம்

## ஒரு கலெக்டரையும் இடமாற்றம் செய்து தேர்தல் கமிஷன் உத்தரவு

புதுடெல்லி, மே.17-

ஆந்திராவில் தேர்தலுக்குப்பிறகும் வன்முறை மற்றும் பதற்றம் நீடித்து வரும் நிலையில் அங்கு 2 மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளை பணியிடை நீக்கம் செய்து தேர்தல் கமிஷன் உத்தரவிட்டு உள்ளது.

### தேர்தலில் வன்முறை

ஆந்திராவில் கடந்த 13-ந்தேதி நாடாளுமன்ற தேர்தலுடன், மாநில சட்டசபைக்கும் வாக்குப்பதிவு நடந்தது.

இந்த தேர்தலின்போது மாநிலத்தின் பல பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றன. ஆளும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியினரும், தெலுங்குதேசம் கட்சியினரும் பல இடங்களில் மோதிக்கொண்டனர்.

இரு கட்சி தொண்டர்களுக்கு இடையேயான இந்த மோதல், வாக்குப்பதிவுக்கு பிறகும் தொடர்ந்தது. இதனால் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் பதற்றமான சூழல் நீடித்து வருகிறது.

எனவே அந்த பகுதிகளில் 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பாக நேரில் விளக்கம் அளிக்குமாறு மாநில தலைமைச் செயலாளர் மற்றும் டி.ஜி.பி.க்கு தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பியது.

### நேரில் ஆஜரானார்கள்

அதன்படி தலைமைச் செயலாளர் ஜவகர் ரெட்டி, டி.ஜி.பி. ஹரீஷ்குமார் குப்தா ஆகியோர் நேற்று டெல்லியில் உள்ள தேர்தல் கமிஷனில் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தனர். அப்போது அவர்களிடம் தேர்தல் கமிஷனர்கள் தங்களது அதிருப்தியை தெரிவித்தனர்.

இந்த வன்முறையில ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்ட தேர்தல் கமிஷனர்கள், மேலும் மோதல் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தினர்.

### பணியிடை நீக்கம்

அப்போது மாநிலத்தில் தாங்கள் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்களை இரு அதிகாரிகளும் தேர்தல் கமிஷன் அதிகாரிகளிடம் விளக்கிக் கூறினார்கள்.

அதன்படி பல்நாடு மற்றும் அனந்தபுரம் மாவட்டங்களின் போலீஸ் சூப்பிரண்டுகளை பணியிடை நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது துறை ரீதியான விசாரணை நடந்து வருவதாக தெரிவித்தனர்.

பல்நாடு கலெக்டர் மற்றும் திருப்பதி போலீஸ் சூப்பிரண்டு ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டு, துறை ரீதியான விசாரணை நடத்தப்படுகிறது என்றும் கூறினர். மேற்கண்ட 3 மாவட்டங்களில் 12 துணை போலீஸ் சூப்பிரண்டுகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதுடன் அவர்கள் மீதும் துறை ரீதியான விசாரணை நடந்து வருவதாகவும், இந்த வழக்கை சிறப்புப் புலனாய்வுக்குழு விசாரிப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு தேர்தல் கமிஷனர்கள் ஒப்புதல் அளித்து உத்தரவு பிறப்பித்தனர்.

### ஆயுதப்படை போலீசார்

அதேநேரம் மாநிலத்தில் வாக்குகள் எண்ணப்பட்ட பிறகு மேலும் 15 நாட்களுக்கு 25 கம்பெனி மத்திய ஆயுதப்படை போலீசாரை சம்பந்தப்பட்ட இடங்களில் நிறுத்தி வைக்க கமிஷன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேர்தல் கமிஷனர்களை இரு அதிகாரிகளும் கேட்டுக் கொண்டனர்.

இதை ஏற்றுக் கொண்ட தேர்தல் கமிஷனர்கள், வன்முறை நடைபெற்ற பகுதிகளில் வாக்கு எண்ணிக்கைக்கு பிறகும் 25 கம்பெனி மத்திய ஆயுதப்படையினரை 15 நாட்களுக்கு நிறுத்தி வைக்க மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு பரிந்துரைத்தனர்.

ECI suspended 2 Superintendent of Police & changed one DEO due to the post violation of andhra election.

தினமணி
17 MAY 2024

## மக்களவைத் தேர்தல்

# முதல் 4 கட்டங்களில் 67% வாக்குப் பதிவு

புது தில்லி, மே 16: மக்களவைக்கு இதுவரை நடைபெற்று முடிந்த நான்கு கட்டத் தேர்தல்களில் சராசரியாக 66.95 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் வியாழக்கிழமை தெரிவித்தது.

அடுத்த மூன்று கட்ட வாக்குப் பதிவுகளின்போது, மக்கள் பெருவாரியாக வாக்களிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

நாட்டின் 18-ஆவது மக்களவையைத் தேர்வு செய்ய ஏழு கட்டங்களாக (ஏப். 19, 26, மே 7, 13, 20, 25, ஜூன் 1) தேர்தல் நடைபெற்று வருகிறது. இதுவரை நான்கு கட்ட வாக்குப் பதிவுகள் நிறைவடைந்துள்ளன.

முதல்கட்டமாக தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 19-ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற்றது. இரண்டாம் கட்டமாக 88 தொகுதிகளுக்கும், மூன்றாம் கட்டமாக 93 தொகுதிகளுக்கும், நான்காம் கட்டமாக 96 தொகுதிகளுக்கும் வாக்குப் பதிவு நடைபெற்றது.

முதல்கட்டத்தில் 66.14 சதவீத வாக்குகள் பதிவாகின. கடந்த 2019-ஆம் ஆண்டில் முதல்கட்டத் தேர்தலில் 69.43 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன.

இரண்டாம் கட்டத்தில் 66.71 சதவீத வாக்குகள் பதிவாகின. கடந்த முறை 69.64 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன. மூன்றாம் கட்டத்தில் 65.68 சதவீத வாக்குகள் பதிவான நிலையில், கடந்த முறை இது 68.4 சதவீதமாக இருந்தது.

முதல் மூன்று கட்டங்களிலும் கடந்த முறையைவிட வாக்குப் பதிவு குறைந்த நிலையில், நான்காம் கட்டத்தில் வாக்குப் பதிவு அதிகரித்தது.

நான்காம் கட்டத் தேர்தலில் 69.16 சதவீத வாக்குகள் பதிவாகின. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 3.65 சதவீத அதிகரிப்பாகும்.

மொத்தமுள்ள 543 தொகுதிகளில் இதுவரை 379 இடங்களுக்கு வாக்குப் பதிவு நிறைவடைந்துள்ளது. நாட்டின் 97 கோடி மொத்த வாக்காளர்களில் இதுவரை 45.10 கோடி பேர் ஜனநாயக கடமையை நிறைவேற்றியுள்ளனர் என்று தேர்தல் ஆணைய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

News regarding 67% vote were registered in the 4th phase election.

தினமணி
17 MAY 2024

# ஆறாம் கட்டத் தேர்தல்: 39% வேட்பாளர்கள் கோடீஸ்வரர்கள்!

புது தில்லி, மே 16: மக்களவை 6-ஆம் கட்டத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 39 சதவீதம் பேர் கோடீஸ்வரர்கள். அவர்களின் சொத்து மதிப்பு சராசரியாக ரூ.6.21 கோடி என ஜனநாயக சீர்திருத்த சங்கம் (ஏடிஆர்) தெரிவித்தது.

18-ஆவது மக்களவைத் தேர்தல் ஏப்ரல் 19-ஆம் தேதி தொடங்கிய நிலையில் தற்போது வரை நான்கு கட்டங்கள் நிறைவடைந்துள்ளன. ஐந்தாம் கட்டத் தேர்தல் மே 20-இல் நடைபெறுகிறது. இதையடுத்து, மக்களவைத் தேர்தலின் ஆறாம் கட்ட வாக்குப்பதிவு மே 25-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் குருஷேத்திரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் நவீன் ஜிண்டால் ரூ.1,241 கோடி சொத்து மதிப்புடன் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்தபடியாக பிஜு ஜனதா தளத்தின் சந்துருப்த் மிஸ்ரா ரூ.482 கோடி சொத்துடன் இரண்டாமிடத்திலும், ஆம் ஆத்மி கட்சியின் சுஷில் குப்தா ரூ.169 கோடி சொத்துடன் மூன்றாம் இடத்திலும் உள்ளதாக ஏடிஆர் தெரிவித்தது.

வேட்பாளர்கள் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தின் அடிப்படையில் ஏடிஆர் நடத்திய ஆய்வில் கூறப்பட்டுள்ளதாவது: மக்களவையின் 6-ஆம் கட்டத் தேர்தலில் மொத்தம் 866 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களில் 338 பேர் (39%) கோடீஸ்வரர்களாவர். அவர்களின் சராசரி சொத்து மதிப்பு ரூ.6.21 கோடியாக உள்ளது.



நவீன் ஜிண்டால் (பாஜக)

**ரூ.1,241 கோடி**



சந்துருப்த் மிஸ்ரா (பிஜேடி)

**ரூ.482 கோடி**



சுஷில் குப்தா (ஆம் ஆத்மி)

**ரூ.169 கோடி**

இத்தேர்தலில் 6 பிரதான கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அந்த வகையில் பாஜக சார்பில் போட்டியிடும் 51 வேட்பாளர்களில் 48 பேரும், காங்கிரஸை சேர்ந்த 25 வேட்பாளர்களில் 20 பேரும், சமாஜவாதியைச் சேர்ந்த 12 வேட்பாளர்களில் 11 பேரும், திரிணமூல் காங்கிரஸை சேர்ந்த 9 வேட்பாளர்களில் 7 பேரும், பிஜு ஜனதா தளத்தைச் சேர்ந்த 6 பேரும், ஆம் ஆத்மியைச் சேர்ந்த 5 பேரில் 4 பேரும் ரூ.1 கோடிக்கு மேல் சொத்து வைத்துள்ளனர்.

**180 பேர் மீது குற்ற வழக்கு:** 411 வேட்பாளர்கள் தங்களுக்கு கடன் இருப்பதாக குறிப்பிட்டுள்ளனர். அதேபோல் 180 வேட்பாளர்கள் மீது குற்ற வழக்குகளும் 141 பேர் மீது அதிதீவிர குற்ற வழக்குகளும் உள்ளன. இத்தேர்தலில் போட்டியிடும் 21 வேட்பாளர்கள் மீது கொலைக்குற்றம் சார்ந்த வழக்குகளும் 3 பேர் மீது பாலியல் துன்புறுத்தல் வழக்குகளும் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொத்து மதிப்பு 2 ரூபாய்!



இத்தேர்தலில் ரோத்க் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் மாஸ்டர் ரன்தீர் சிங் தன்னுடைய சொத்து மதிப்பு ரூ.2 என குறிப்பிட்டுள்ளார்.

இதுவே இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் குறைந்தபட்ச சொத்து மதிப்பாகும்.

பணமாக 1 ரூபாயும் வங்கியில் சேமிப்பாக 1 ரூபாயும் வைத்துள்ளதாக பிரமாணப் பத்திரத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

39% of the candidate are milionaires in the 6 th phase election

தினமணி

17 MAY 2024

# வாக்கு எண்ணும் பணி: அலுவலர்களுக்கு அடுத்த வாரம் பயிற்சி தொடக்கம்

சென்னை, மே 16: மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு அடுத்த வாரம் தொடங்கப்படவுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

இது குறித்து, தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அவர் வியாழக்கிழமை அளித்த பேட்டி: மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு இயந்திரங்கள் அனைத்தும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளுக்கு முன்பாக, கூடுதல் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், மின்சாரம் தடைபட்டாலும் அவை இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி:** வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி அடுத்த வாரம் தொடங்க உள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் ஒரே தேதியில் பயிற்சியை வழங்க வேண்டிய அவசியமில்லை. பயிற்சிக்கான தேதி, நேரத்தை மாவட்டத் தேர்தல் அதிகாரிகளே முடிவு செய்துகொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வாக்கு எண்ணிக்கையின்போது, ஒவ்வொரு மேசைக்கும் ஒரு நுண் பார்வையாளர் நியமிக்கப்படுவார். தேர்தலின்போது பணியாற்றிய பார்வையாளர்கள், வாக்கு எண்ணிக்கையின்போதும், கண்காணிப்பில் ஈடுபடுவர். மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட சட்டப்பேரவைத் தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கையை கவனிக்கத் தேவைப்படும் இடங்களில், ஐஏஎஸ் அதிகாரிகள் அல்லது மாநில அதிகாரிகளை தேர்தல் ஆணையம் கூடுதல் பார்வையாளர்களாக நியமிக்கும்.

**எல்லையில் பறக்கும் படையினர் வாபஸ்:** தற்போது அண்டை மாநிலங்களில் வாக்குப் பதிவு முடிந்துள்ளதால், எல்லையோர மாவட்டங்களில் பறக்கும் படையினர், கண்காணிப்புக் குழுவினர் திரும்பப் பெறப்படுவர்.

தற்போது மாநில எல்லைப் பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் வழக்கமான சோதனைகள் தொடரும். வெளிமாநிலங்களில் இருந்து வரும் வாகனங்களில் நடத்தப்படும் சோதனையில் ரொக்கம் உள்ளிட்டவற்றின் விவரங்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்குத் தெரிவிக்கப்படும். அதேபோன்று, அவர்களும் தமிழக பதிவு எண் கொண்ட வாகனங்களில் பிடிபடும் ரொக்கம், பொருள்களின் விவரங்களை நம்மிடம் தெரிவிப்பர். இதர மத்திய அரசுத் துறைகளால் பறிமுதல் செய்யப்படும் தொகை குறித்த விவரங்கள் நேரடியாக தேர்தல் ஆணையத்திடம் கூறப்படும் என்று அவர் தெரிவித்தார்.

News regarding Training class for counting persons will be conduct next week

தினகரன்

1 7 MAY 2024

# 4 கட்ட மக்களவை தேர்தலில் 67 சதவீத வாக்கு பதிவு

## தேர்தல் ஆணையம் தகவல்

புதுடெல்லி, மே17: தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மே 13ம் தேதி நடந்த 4ம் கட்ட வாக்குப்பதிவில் இறுதி வாக்காளர் எண்ணிக்கை 69.16 சதவீதம். இது கடந்த 2019ம் ஆண்டு தேர்தலின் போது 4ம் கட்டத்தில் பதிவானதை விட 3.65% அதிகம். 3ம் கட்ட வாக்குப்பதிவில் இறுதி வாக்காளர்களின் எண்ணிக்கை 65.68 %. 2019 தேர்தலில் 3ம் கட்ட தேர்தலில் 68.4 சதவீத வாக்குகள் பதிவாகின. ஏப்ரல் 26 ம் தேதி நடந்த 2ம் கட்டத் தேர்தலில், 66.71 சதவீதம் பதிவாகியுள்ளது. 2019 தேர்தலில், 69.64 சதவீதம் பதிவாகியது. முதல் கட்ட தேர்தலில் 66.14 % பதிவாகியுள்ளது. கடந்த 2019 தேர்தலில் 69.43 % பதிவானது. இதுவரை நடந்த 4 கட்ட தேர்தலில் 66.95 % பதிவாகியுள்ளது' என தெரிவித்துள்ளது.

67% vote were registered in the 4th phase election

தினகரன்

17 MAY 2024

### தமிழகத்தில் மொத்தமுள்ள 39 மையங்களில்

# வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கு அடுத்த வாரம் பயிற்சி

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, மே 17: தமிழகத்தில் மொத்தமுள்ள 39 மையங்களில் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கு அடுத்த வாரம் பயிற்சி தொடங்கும் என தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கூறினார்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 39 நாடாளுமன்ற தொகுதிக்கும் ஒரே கட்டமாக கடந்த ஏப்ரல் மாதம் 19ம் தேதி வாக்குப்பதிவு முடிந்தது. வாக்குப்பெட்டி இயந்திரங்கள் 39 வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள், வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகள் குறித்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கடந்த சில தினங்களாக திருவள்ளூர், ராமநாதபுரம், தூத்துக்குடி தொகுதிகளில் ஆய்வு செய்தார்.

இந்நிலையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது:

வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியாக செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, ஸ்டிராங் ரூம் முன்பு கூடுதல் கேமரா பொருத்தப்பட்டு, மின்சாரம் தடைபட்டாலும் அந்த கேமரா இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



தமிழகத்தில் மொத்தமுள்ள 39 மையங்களில் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி அடுத்த வாரம் தொடங்கும். அனைத்து மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாக இல்லாமல், மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பயிற்சிக்கான தேதியை முடிவு செய்வார்கள்.

தற்போது அண்டை மாநிலங்களில் வாக்குப்பதிவு முடிந்துள்ளதால், எல்லையோர மாவட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ள பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுக்கள் திரும்ப பெறப்பட்டுள்ளனர். அதேநேரம் எல்லை பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில்வழக்கமான சோதனை தொடர்ந்து நடைபெறும். இந்த சோதனைச்சாவடிகளில் வெளிமாநிலங்களில் இருந்து வரும் வாகனங்களில் பிடிபடும் ரொக்கம் உள்ளிட்டவற்றின் மதிப்பு, அந்தந்த அண்டை மாநிலங்களுக்கும் தெரிவிக்கப்படும்.

அதேபோல், அவர்களும் பிடிபடும் ரொக்கம், பொருட்களின் விவரங்களை தெரிவிப்பார்கள். வருமான வரி துறையால் பிடிக்கப்படும் தொகை குறித்த விவரங்கள் நேரடியாக தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிக்கப்படும்.

வாக்கு எண்ணிக்கையின்போது, ஒவ்வொரு மேஜைக்கும் ஒரு நுண் பார்வையாளர் நியமிக்கப்படுவார். தேர்தலின் போது பணியாற்றிய மத்திய பார்வையாளர்கள் வாக்கு எண்ணிக்கையின் போதும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட சட்டப்பேரவை தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கையை கவனிக்க தேவைப்படும் இடங்களில் ஐஏஎஸ் அல்லது மாநில அதிகாரிகளை தேர்தல் ஆணையம் கூடுதல் பார்வையாளர்களாக நியமிக்கும். இவ்வாறு அவர தெரிவித்தார்.

CEO, TN informs that Training class for counting persons will be conduct next week.

தினமலர்
17 MAY 2024

# புது யுக்தி!

## • தேர்தல் விழிப்புணர்வு பிரசாரத்தில்...
## • ஓட்டுப்பதிவை அதிகரிக்க திட்டம்

– நமது சிறப்பு நிருபர் –

**நடந்து முடிந்த லோக்சபா தேர்தலின் நான்கு கட்ட ஓட்டுப்பதிவில், எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் ஆர்வமாக வந்து ஓட்டளிக்காததை அடுத்து, அடுத்த மூன்று கட்ட ஓட்டுப்பதிவில் மக்களின் ஆர்வத்தை துாண்ட, பல்வேறு விறுவிறுப்பான விளம்பர யுக்திகளை தேர்தல் கமிஷன் கையில் எடுத்துள்ளது.**



ராஜிவ் குமார்

ஏப்., 19 முதல் ஜூன் 1 வரை ஏழு கட்டங்களாக நடக்கும் லோக்சபா தேர்தலின் நான்கு கட்ட ஓட்டுப்பதிவுகள் முடிந்துள்ளன.

இவற்றில், 66.95 சதவீதம் அதாவது, 45 கோடி மக்கள் ஓட்டளித்துள்ளனர். அப்படியானால், 33.05 சதவீதம் பேர் தங்கள் ஜனநாயக கடமையை செய்யவில்லை. அந்த எண்ணிக்கை, கிட்டத்தட்ட 22.26 கோடியாக உள்ளது.

### வலியுறுத்தல்

வரும் 20, 25 மற்றும் ஜூன் 1ல் நடக்கும் கடைசி மூன்று கட்ட தேர்தலில், மக்களை ஆர்வமுடன் வந்து ஓட்டளிக்கச் செய்ய பல்வேறு புதிய யுக்திகளை மேற்கொள்ள தேர்தல் கமிஷன் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து தலைமை தேர்தல் கமிஷனர் ராஜிவ் குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தேர்தலில் நாம் திரளாக வந்து ஓட்டளித்தால் தான், நம் ஜனநாயகத்தின் வலிமையை இந்த உலகுக்கே உணர்த்த முடியும். எனவே, தேர்தல் நாளை விடுமுறை நாளாக கருதாமல், பெருமைக்குரிய நாளாக நினைத்து அனைவரும் வந்து ஓட்டளிக்க வேண்டும்.

இதற்காக பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்களுக்கு திட்டமிட்டு உள்ளோம்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் உங்களை தொலைபேசி வாயிலாக அழைத்து ஓட்டளிக்கும்படி வலியுறுத்தினால் ஆச்சரியம் அடையாதீர்கள்.

சச்சினின், 'ஆடியோ – வீடியோ' விழிப்புணர்வு பிரசாரங்கள், 'மொபைல் போன்' வாயிலாகவும், ஐ.பி.எல்., கிரிக்கெட் போட்டிகள் நடக்கும் மைதானங்கள் வாயிலாகவும் மக்களை சென்றடைய உள்ளன.

அதுமட்டுமின்றி, 10 ஐ.பி.எல்., அணிகளைச் சேர்ந்த வீரர்களும் இந்த விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட உள்ளனர்.

பி.எஸ்.என்.எல்., ஏர்டெல், ஜியோ, வோடபோன் போன்ற தொலைபேசி சேவை நிறுவனங்களுடன் கூட்டணி அமைத்து, குரல் அழைப்பு, எஸ்.எம்.எஸ்., வாட்ஸாப் பிரசாரங்களை அதிகரிக்க முடிவு செய்து உள்ளோம்.

கூகுள், யுடியூப் போன்ற சமூக ஊடகங்களும் எங்களுடன் இணைந்து ஓட்டு சதவீதத்தை அதிகரிக்க பிரசாரம் செய்ய உள்ளன.

### சிறப்பு சலுகை

மேலும், 16,000 பெட்ரோல் பங்குகளில் விளம்பர பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. விமான நிலையங்கள், விமானங்களுக்கு உள்ளேயும் ஓட்டளிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் பிரசாரங்கள் துவங்கி விட்டன.

ஸ்விக்கி, ஸோமாட்டோ உள்ளிட்ட உணவு டெலிவரி நிறுவனங்கள், ஊபர் வாகன சேவை நிறுவனம் உள்ளிட்டவை இந்த விழிப்புணர்வு பிரசாரத்தில் இணைந்துள்ளன. ஓட்டளிக்கச் செல்பவர்களுக்கு ஊபர் வாகனங்களில் சிறப்பு சலுகை வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

Hon'ble CEC informs that new strategy for improve the vote.